Registered as a Newspaper in Ceylon ** விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்:389
National Tamil Daily
மலர் 10
இதழ் 207
தேசிய தினசரி

ஈழநாடு ஆவணி 20 ஆடி 11 வியாழக்கிழமை (5-9-68)



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றேட்,
யாழ்ப்பாணம்.

# காங்கேசன் துறைமுக விஸ்தரிப்பு வேலை விரைவில் ஆரம்பம்

## ரூ. 40 லட்சம் பொருட்கள் வெளிநாட்டிலிருந்து வரும்

### ஆட்சிமன்றத்தில் தேசிய சேவை அமைச்சர் தகவல்

கொழும்பு, புதன்

காங்கேசன்துறை துறைமுக விஸ்தரிப்பு வேலைகள் விரைவில் ஆரம்பமாகும் இதற்கான 40 லக்ஷம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் வெளிநாட்டிலிருந்து பெறப்படும்.

தேசிய சேவை அமைச்சர் திரு வி. ஏ. சுகததாச ஆட்சிமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

தேசிய சேவை அமைச்சின் செலவின ஒதுக்கீட்டு விவாதத்தின்போது பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காங்கேசன்துறை துறைமுக வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக குறிப்பிட்ட அமைச்சர் இதற்காக உபயோகிப்பதற்காக 40 லட்சம் ரூபாய் பெறுமதியான நவீன பொருட்கள் வெளிநாட்டிலிருந்து வரவிருப்பதாகவும் தெரிவித்தார்.

## 'வடக்கில் தும்புத் தொழிற்சாலை நிறுவுக'

### ஆட்சிமன்றத்தில் பண்டிதர்

கொழும்பு, புதன்

வடக்கில் தும்புத்தொழிற்சாலை ஒன்றை அமைக்க வேண்டுமென்று ஆட்சிமன்றத்தில் இன்று கோரினார் கிளிநொச்சி தொகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம்.

தமது தொகுதியான கிளிநொச்சியிலுள்ள துணுக்காயில் நெசவாலை ஒன்றை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்ட பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் தேசிய அரசாங்கம் விவசாயிகளுக்கு நன்மையளிக்கக் கூடிய அத்தியாவசிய பணியாற்றுகின்றதென்று குறிப்பிட்டார்.

மீனவர்களுக்கு நன்மையளிக்கக்கூடிய விதத்தில் அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கைத்தொழில் மீன்பிடி செலவின ஒதுக்கீட்டு விவாதம் இன்று நடந்தபோதே பண்டிதர் இரத்தினம் மேற்கண்டவாறு சொன்னார்.

தமிழரசுக் கட்சித் தலைவரும் நல்லூர் எம். பியுமான டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசுகையில் கைத்தொழில் மீன்பிடி அமைச்சைப்பற்றி நான் பேசினால் எதிர்க்கட்சியிலிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். வடபகுதியில் தும்புத்தொழிற்சாலை நிறுவவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

டாக்டர் நாகநாதன், யாழ்ப்பாணம் எம் பியும் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில் வடபகுதியில் மீன்பிடிப் பயிற்சிப் பாடசாலையொன்று அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

டாக்டர் என். எம். பெரேராவும் பேசினார்.

வடமாகாணத்தில்

## 20 உபதபால் நிலையங்கள் விரைவில் திறக்கப்படும்

நல்லூர், வியாழன்

வடமாகாணத்தில் மேலும் இருபது உபதபால் நிலையங்கள் திறக்கப்படவிருக்கின்றன.

ஜூலை மாதத்திலும் ஆகஸ்ட் மாதத்திலும் ஏழாலை, மண்டாதீவு, மல்லாவி, சந்திரபுரம் ஆகிய இடங்களில் உபதபால் கந்தோர்கள் திறக்கப்பட்டன. வலந்தலை, நயினாதீவு, நாவற்கோவில், சாவெட்டி கிழக்கு, சோனகதெரு, எழுதுமட்டுவாள் ஆகிய இடங்களிலுள்ள உபதபாற் கந்தோர்களுக்கு கடந்த மாதத்தில் டெலிபோன் தொடர்பு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

கிரம்பத்தான், குப்பிழான், நாவாந்துறை, அச்சுவேலி, வல்வெட்டி, ஆலியன்வளவு, விடத்தல்பளை, கிலாலி, ஆண்டிமபிளியன்குளம், முத்தையன்குளம் ஆகிய இடங்களுக்கான புதிய உபதபால் அதிபர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

அக்டோபர் 1ல்

## பி. எம். ஜி.யாக பதவி ஏற்கிறார்

நல்லூர், புதன்

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா அக்டோபர் மாதம் 1-ம் திகதி போஸ்மாஸ்டர் ஜெனரலாக பதவியேற்கின்றார். முன்னரே இவர் பதவியேற்கவிருந்தார். பின்னர் 3 மாத காலம் தொடர்ந்து இங்கு அரசாங்க அதிபராக பணியாற்ற பணிக்கப்பட்டிருந்தார்.

கண்டம் விட்டு கண்டம் பாயும்

## புதிய ரஷ்ய ஏவாயுதம்!

மாஸ்கோ, செப் 4

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் புதிய ஏவாயுதமொன்றை சோவியத் யூனியன் பரிசோதித்துள்ளது. 100 மைல் இடைவெளிக்கு ஒரு தடவையாக நாக்குகள் நடத்தக்கூடிய சக்திமிக்க இந்த ஏவாயுதம் சோவியத்தின் தென்பகுதியில் பரிசோதனைக்கு விடப்பட்டது.

சுமார் 2,500 எடையுள்ள 4 வெவ்வேறு யுத்தக் கருவிகளை உள்ளடக்கியுள்ளது இந்தக்கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவாயுதம்.

## செக். தூதுக்குழு ரஷ்யா செல்லும்

பிராக், செப். 4

செக். நாட்டுக்குப் பொருளாதார உதவிகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு சோவியத் ரஷ்யாவுக்கு செக்கோஸ்லவாக்கியா தூதுக்குழுவொன்று செல்லவுள்ளது.

செக் நாட்டு வானொலியொன்று இத்தத் தகவலை இன்று பிரசுரித்தது.

இருநாட்டுக் குமிடையிலான வர்த்தகத் தொடர்புகள் குறித்து செக் நாட்டுத் தூதுக்குழு ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும்.

செக் நாட்டில் வார்சோ ராணுவ ஒப்பந்த நாடுகள் ஆக்கிரமிப்பின் போது ஏற்படுத்திய சேதங்களுக்கு ரஷ்யா ஏற்ற உதவிகள் அளித்து ஈடு செய்ய வேண்டுமென்றும்

8-ம் பக்கம் பார்க்க

லதா சேட்ஸ்

லதா கைத்தொழிலினால் தயாரிக்கப்பட்டது.
வெட்டு (cut), தையல், அளவு (fit) களுக்கு பெயர் பெற்று விளங்குவது
குறைந்த விலையில், நீடித்த பாவிப்புக்கு
லதா சேட்டை வாங்குங்கள்.
எங்கும் எல்லாப் பிரசித்தமான கடைகளிலும் கிடைக்கும்.
இது ஓர் லதா இன்டஸ்றீஸ் தயாரிப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

குறிப்பு: எல். ஏ/1299
1964ம் ஆண்டின் 28ம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுள்ள காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 7ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவைக்கு எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1968ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை இலக்கம்: 14818 பகுதி IIIஇல் பார்க்கவும்.

**அட்டவணை**

காரியாதிகாரியின் பிரிவு: தென்மராட்சி.
கிராமத்தின் பெயர்: மந்துவில்.
காணியின் பெயர்: செம்பகமுதலியார் வளவு.
ஆரம்ப பட இல: வ.175
துண்டு இல: 1,2.

இ. முருகேசபிள்ளை,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்,
ஆகஸ்ட், 24. 1968.
GP 7195

குறிப்பு: எல். ஏ/1288
1964ம் ஆண்டின் 28ம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுள்ள காணி எடுத்தற் சட்டத்தின் [அத்தியாயம் 460]

### 7ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவைக்கு எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1968ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை இலக்கம்: 14,818 பகுதி IIIஇல் பார்க்கவும்.

**அட்டவணை**

காரியாதிகாரியின் பிரிவு: தீவுப்பகுதி.
கிராமத்தின் பெயர்: மண்கும்பான்.
காணியின் பெயர்: பிள்ளைத்தோட்டம்.
ஆரம்ப பட இல: ப.164
துண்டு இல: 1.

இ. முருகேசபிள்ளை,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்,
ஆகஸ்ட், 24. 1968.
GP 7198


**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Leo Genn, Chrisopher Lee,
Suzy Kendau
in
CIRCUS OF FEAR
(Eastman Colour)

71-வது தினம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
மணமகன் [illegible]

4-வது வாரம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
AVM.ராஜன் - புஷ்பலதா
நடித்த
கற்பூரம்

[illegible]
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 10-00
நாகேஷ் — விஜயா
நடித்த
சர்வர் சுந்தரம்

6-வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி—பிளாஸா
(கொழும்பு)
மைலன்
(கொழும்பு)
வெலிங்டன்—விஜயா
(யாழ்நகர்) (மட்டுநகர்)
ரவிச்சந்திரன்—ஜெயலலிதா
நாகேஷ்—மனோரமா
நடித்த
ஸ்ரீவிநாயகா
பிக்சர்ஸ்
# நான்

5-வது வெற்றி வாரம்
கெபிட்டல்
(கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
சங்கம்

விரைவில்
எதிர்பாருங்கள்
எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
நடித்த
நான் ஆணையிட்டால்


### திருமலைச் செய்திகள்

# ரூ. 60லட்சம்செலவில்வீதிதிருத்தம்

## நகரசபைத்தலைவர் தமது மாதாந்த அலவன்ஸை நூல்நிலையத்திற்கு அளிப்பார்

திருக்கோணமலை, புதன் திருக்கோணமலை — கொழும்புப் பாதை நவீன முறையில் சீர் திருத்தப்படவிருக்கிறது. இந்த வேலைக்காக அரசாங்கம் சுமார் 60 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்திருக்கின்றது. ஆகவே வேலைகள் யாவும் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுவிடுமென்றும் இதற்கான வழிவகைகள் பற்றிப் பிரதமர் பொது வேலை அமைச்சருடன் கலந்தாலோசனை செய்திருப்பதாகவும் திருக்கோணமலை பட்டின வெளி வாயிலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பாதை திருத்தம் இவ்வருட முடிவுக்குள் 14 மைல் நீளத்துக்குச் செப்பனிடப்பட்டு விடுமெனவும் திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு சோமபால குணதீர தெரிவித்துள்ளார்.

இதனுக்குபுதிதாக நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டுக் கவுன்சில் பெருமளவு நன்மை பெறப்போவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். இவ்வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் அத்தனையையும் வீண் செலவு எதுவும் ஏற்படாதவாறு குறுகிய காலத்தில் வேலைகள் முடிவுறவும் இதற்கென ஒரு விசேஷ செயலாற்றும் அறை அமைத்து அதன் மூலம் இந்த வேலைகளை மிகக் கவனத்துடன் அவதானித்துச்செலவளிக்கப்போவதாகவும் அவர் கூறினார். இலங்கையிலுள்ள 22 மாவட்டங்களில் திருக்கோணமலை மாவட்டம் ஒன்றே பிரதமரின் செயலாற்றும் அறையிலே நாட்டு முன்னேற்றத்தைக் காண்பிக்கும் விதத்திலே இடம்பெற்றுள்ளது. பிரதமர் தமது செயலாற்றும் அறையிலே இருந்தவாறே திருக்கோணமலையில் இயங்கும் சகல விதத் திணைக்களங்களினதும் செயல் முறையை இலகுவாக அவதானித்துக் கொள்ள முடிகின்றது. இதே போன்று இந்த மாவட்டத்திலே அரசாங்கத்தினர் தங்கள் செயலாற்றும் அறையிலிருந்துகொண்டே மாவட்டத்தின் நவீன வீதி புனருத்தாரண வேலைகளை அவதானித்துக் கொள்வார்.

**நகரசபைத் தலைவர் தியாகம்**

திருக்கோணமலை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் தலைவர் டாக்டர் எஸ். சிவானந்தம் தமக்குக் கிடைக்கும் மாதாந்த பிரயாண அலவன்சான 200 ரூபாவையும் தாம் நகரசபையின் கீழ் இயங்கும் பொது நூல்நிலையத்துக்கு நன்கொடையாக அளிக்கப் போவதாகக் கூறினார்.

**கருத்தரங்கு**

திருக்கோணமலை இராமகிருஷ்ணமிஷன் இந்துக்கல்லூரியில் கிராமத்தலைவர்களுக்கான மூன்று நாள் கருத்தரங்கு ஒன்றை திருக்கோணமலை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். ஞானம் ஆரம்பித்து வைத்தார்.

திருக்கோணமலை மாவட்ட இளைப்பாறிய அரசாங்க ஊழியர் சங்கத்தில் 1968-69-ம் வருடங்களுக்கான உத்தியோகத்தர்கள் பின்வருமாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

போஷகர் திரு. எம். நமசிவாயம், தலைவர் திரு. வி. நவரத்தினராசா, உபதலைவர் திரு. பீ. கே. குத்திரா, கௌரவ காரியதரிசி திரு. எம். சீ. சேனாதிராசா, தனாதிகாரி திரு. ரீ. காசிநாதர், கணக்குப் பரிசோதகர் திரு. ரீ. மாணிக்கம்.

திருவாளர்கள் கே. தியாகராசா, எம். பொன்னுசாமி, எம். கோணமலை, எம். அருள்வாசகம், எஸ்.பி. முத்துக்குமாரு, எஸ். பி. துரை

(7-ம் பக்கம் பார்க்க)

### அல்லைப்பிட்டிக் கிராமசபை

அல்லைப்பிட்டிக் கிராமப் பிரதேசத்து எல்லைக்குள் மணல், மண், கல் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு வரி அறவிடுவதற்கான

**கேள்வி விளம்பரம்**

1968ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1ந் திகதி தொடக்கம் 1969ம் ஆண்டு புரட்டாசி மாதம் 30ந் திகதி வரையும் அல்லைப்பிட்டி கிராமப் பிரதேசத்து எல்லைக்குள் மணல், மண், கல், ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்கு வரி அறவிடுவதற்கு 16-9-68 திங்கட்கிழமை காலை 10 மணிவரை அல்லைப்பிட்டிக் கிராமசபைக் கந்தோரில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு கேள்விப் பத்திரத்துக்கும் ரூபா 250/- கேள்விப் பிணையாகவும், ரூபா 10/- கேள்விப்பத்திரக்கிரயமாகவும் கொடுத்து அல்லைப்பிட்டிக் கிராமசபைக் கந்தோரில் முறையான கேள்விப் பத்திரம் பெற்று அப்பத்திரத்திலேயே விண்ணப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 15-9-68பகல் 12-00 மணிவரை வழங்கப்படும். இதற்குரிய பிரமாணங்களையும் நிபந்தனைகளையும் அல்லைப்பிட்டிக் கிராமசபைக் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

க. கதிரவேலு,
தலைவர்.

அல்லைப்பிட்டிக்
கிராமசபைக் கந்தோர்,
மண்டைதீவு.
4-9-1968. 963

### பற்றுச்சீட்டு அவசியம்

வல்வெட்டித்துறையிலா. செல்வச்சந்நிதியில் நடைபெற்றுவரும் உற்சவ தினமான இன்று, நாளை, ஆகிய தினங்களில் காவடி, அர்ச்சனை ஆகியவற்றிற்கு பற்றுச் சீட்டுகள் வழங்கப்படும். பற்றுச் சீட்டுகள் எடுக்காதவர்களின் காவடி, அர்ச்சனை செய்தல் தடைப்படும் எனத்தெரிய வருகிறது.

தினமும் மாலை ஆசிரியர் திரு. கே. தருமலிங்கம் தலைமையில் கந்தபுராணப் படிப்பு நடைபெற்று வருகிறது.

சுன்னாகத்தில்

### கொட்டில் தீக்கிரை

சுன்னாகம் புதன் சுன்னாக கிழக்கு ஆலயத்தின் வீதியில் கள்ளுக் கொட்டில் ஒன்றில் தீப் பற்றிக் கொண்டதின் காரணமாக மற்றும்ஒரு கள்ளுக் கொட்டிலும் பக்கத்துவீட்டு வேலியும் எரிந்து சாம்பலாகின.

கப்பன் செல்லன் என்பவருக்குச் சொந்தமான இக் கொட்டில்களை இனந்தெரியாத நபர்கள் விஷமத்தனமாக தீயிட்டு சேதப்படுத்தியிருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகின்றது சுன்னாகம் பொலிசார் புலன் விசாரணை நடத்துகின்றனர்.


வின்ஸர்
தினசரி 3 காட்சிகள்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
நடித்த
[illegible]


### கடலோரத்தில் காணப்பட்ட சடலம்

[illegible] புதன் பருத்தித்துறை வல்லிபுரம் ஆழ்வார் கடல் தீர்த்தப் பாதையில் கற்கோவளம் கடற்கரையில் ஓர் ஆண்சடலம் கிடக்கக் காணப்பட்டது.

இச் சடலத்தை அடையாளம் கண்டுபிடித்த பொலிசார் விசாரணை நடத்தினர்கள்.

விசாரணையில் அநுராதபுரம் சேர்ணைப் கந்தோரில் வேலைசெய்யும் புலோலி தெற்கு வாசியான கனகசேகரம் நடராசா சாட்சியமளிக்கையில் இறந்துகிடந்த ஆண்சடலம் தனது தகப்பனார் என்றும் இறந்த தனது தகப்பனார் புற்றுநோயினால் கஷ்டமுற்றார் என்றும் கூறினார்.

மரணவிசாரணை அதிகாரி திருவாளர், எஸ். இராமநாதன் தற்கொலை என்று தீர்ப்பு அளித்தார்.

## வரி விளம்பரம்

### திருமண அழைப்பு

மல்லாகம் திரு. ஆறுமுகம் தம்பதிகளின் மகள் பரமேஸ்வரிக்கும் திரு. வேலுப்பிள்ளை தம்பதிகளின் மகன் செல்வரத்தினத்திற்கும் (8-9-68) ஆவணி மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரன் கோயிலில் திருமணம் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். மணமகள் இல்லத்தில் வரவேற்புபசாரம் [9-9-68] திங்கட்கிழமையும், மணமகன் இல்லத்தில் [10-9-68] செவ்வாய்க்கிழமையும் நடைபெறும். 70

### விற்பனைக்கு

காணி

கோண்டாவில் கிழக்குச் சந்தியில் இருந்து இருபாலை றோட்டில் இருக்கும் றோட்டுக் கரையில் உள்ள 5 பரப்புக் காணி ஒன்று விற்பனைக்குண்டு. விபரங்கட்குத் தொடர்பு கொள்ளவும். செ. பஞ்சலிங்கம், பழக்கடை, பலாலி வீதி, கோண்டாவில். 72

### தேவை

சாய்ப்புச் சாமான்கள் (Fancy Goods) வியாபாரத்தில் அனுபவமுள்ள ஒரு விற்பனையாளரும் மனேச்சரும் தேவை. இ. தர்மலிங்கம், புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் என்ற விலாசத்துக்கு எழுத்தில் விண்ணப்பிக்கவும். 75

### தேவை

சைக்கிளில் சென்று பலசரக்கு வியாபாரம் செய்வதற்கு இளைஞர்கள் தேவை. நேரில் வரவும். எஸ். முத்துக்கிருஷ்ணன், 426/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒருபடி உயர்வோமா?—9

# தினம் ஒரு உதவி செய்வோம்!

—கணேஷ்—

மிருகங்களுக்கு உணவு அருந்த வைக்க உதவுகிறது: எத்தனையோ நல்ல காட்சிகளைக் காண கண்கள் உதவுகின்றன! இன்னிசையை அனுபவிக்க காதுகள் உதவுகின்றன! எத்தனையோ மைல்களுக்கப்பால் சென்று நம் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய எமது கால்கள் உதவுகின்றன! இத்தனையையும் பலன் எதிர்பாராமல் நமக்குத் தந்த அந்த இறைவனுக்கு நாம் இதனைத் திரும்பிய முழுமையான நன்றியை செலுத்துவதோடு நின்றுவிடாது பிறருக்கும் நம்மாலான சிறிதளவு உதவியாவது செய்யமுயற்சிப்போமா?

ஒரு நாளைக்கு ஒருவருக்கு நாம் பலன் எதிர்பாராமல் ஒரு உதவியைச் செய்ய முயற்சிப்போம். நாளொன்றுக்கு ஒரு உதவி என்பது நமது வாழ்க்கைத் திட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாக இருக்கட்டும்.

இவ்விதம் யாருக்கேனும் ஒரு நாளைக்கு ஒரு உதவியாவது செய்யவேண்டும் என்று நமது எண்ணத்தில் தோன்றிவிட்டால் பின்னர் நம்மிடமுள்ள வேண்டாத குணங்கள் தேவையற்ற குணங்கள் தீய நினைவுகள் நம்மை விட்டு மெல்ல மெல்லச் சென்று நம்மைப் புனிதமாக்கிப் பூரணத்துவமாக்கிவிடும்: உதவிசெய்யவேண்டுமென்ற எண்ணமே நம் முன் வளர்ந்துவரத்தொடங்கும்.

நாம் பிறருக்கு ஒரு உதவியைச் செய்வதால் அவர் ஆறுதலடைவதோடு நாமும் மனநிறைவு கொள்ளமுடிகிறது, ஆறுதலடைய முடிகிறது. இவ்விதம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிறு உதவி செய்யும்பொழுது நமது கவலைகள், பிரச்னைகள் நாம் ஓரளவாவது மறந்து கொள்ள முடிவதோடு சமுதாயத்துக்கு சமுதாய நலனுக்கு நாம் ஆற்றவேண்டிய பணிகளையும், கடமையையும் மெல்ல மெல்ல நிறைவேற்றுவதாக இருக்கும்.

பிறரது கவலைகளைப் போக்க நம்மால் இயன்றளவாவது முடியுமா என்று பார்ப்போம். பிறரது வாழ்வை உயர்த்த நம்மால் சாத்தியமாவது முடிகிறதா என்று முயன்று பார்ப்போம். பிறரது அழுகையைப் போக்கி அவர்களுக்கு ஆனந்தத்தை உண்டாக்க நம்மால் சிறிதளவு உதவியாவது செய்யமுடியுமா என சிந்தித்து செயல் புரிவோம். இந்த வழியில் தினமும் நமது சிந்தனைகள் சென்றுகொண்டிருந்தால் நாம் பெற்ற அறிவு இதைத்தான் விளங்கவேண்டிய அவசியம் ஒருபோதுமே ஏற்படாது. மனம் வளர்ந்து கொண்டிருக்கும்போது வாழ்வு வளராமல் இருக்குமா?

பிறரது அல்லலைப்போக்க நாம் முன்னிற்போமானால் நம் மனதில் தீயநினைவுகளின் நிழலே படரமுடியாது.

நல்ல நினைவுகள் வளரும் பொழுது நாம் உயர்ந்து கொண்டுதான் இருப்போம்.

பிறர் ஆறுதலடைவதைக் கண்டு ஆனந்திப்போம்.

பரிசுப் போட்டி-3

# 'மனிதகுலத்துக்கு மகாத்மாவின் சேவை'

மனிதகுலத்தை வாழ வைக்க வந்த மகாத்மாவைப் பற்றி நீங்கள் எவ்வளவு அறிந்து வைத்திருக்கிறீர்கள்?

அவரின் நூற்றாண்டு நினைவுதினம் அடுத்தமாதம் வருகிறதென்பது எல்லாருக்கும் தெரியும்.

'மனித குலத்துக்கு மகாத்மாவின் சேவை' பரிசுப்போட்டி —3க்கு நாம் தேர்ந்தெடுத்துள்ள தலைப்பு இதுதான். இந்தத் தலைப்பில் புல்ஸ்காப் தாளின் நான்கு பக்கத்துக்கு குறையாமலும், அதிகரிக்காமலும் கட்டுரையை எழுதுங்கள். தாளின் ஒரு பக்கத்திலேயே கட்டுரை எழுதப்படவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது சிறந்த கட்டுரைக்கு 15 ரூபாய் பரிசாக வழங்கப்படும். இரண்டாம், மூன்றும் பரிசுகளுக்கு புத்தகங்கள் வழங்கப்படும்.

கட்டுரைகள் அனுப்பவேண்டிய முடிவு.திகதி 20-9-68

பாடசாலையில் பயிலும் 14 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் போட்டியில் பங்குபற்றலாம்.

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி: பரிசுப்போட்டி-3, 'மாணவர் மலர்', மே/பா, 'ஈழநாடு', த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்.

—பாமா.

## சிங்கப்பூர்ப்பந்து

வட்ட வட்டப் பந்து
வட்டு ரப்புப் பந்து?
இடகாற்றுப் போனால்
இஃது என்ன பந்து?
துள்ளித் துள்ளி ஓடி
தூர விழும் பந்து
கொள்ளை இன்பம் தந்து
குலவச் செய்யும் பந்து
இன்பச் சின்னப் பந்து
சிவப்பு நிறப் பந்து
[illegible]
'சிங்கப் பூரின் பந்து'

ச. தங்கராசா

## தெரிந்து கொள்ளுங்கள்

O இரண்டாவது உலகமகாயுத்தம் எப்போ ஆரம்பமானது?
1939-ம் ஆண்டு செப்டெம்பர் 3-ம்.

O இலங்கைக்கு வந்த முதல் அமெரிக்க மிதக்கும் ஆஸ்பத்திரிக் கப்பலின் பெயர்?
ஹோப்.

O காசியப்பன் கட்டிய மலைக் கோட்டையின் பெயர் என்ன?
சிகிரியா.

O முத்தமிழ்கள் எவை?
இயல், இசை, நாடகம்.

O முக்கனிகள் எவை?
மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம்.

O மும்மூர்த்திகள் யார்?
சிவன், பிரமா, விஷ்ணு.

அனுப்பியவர்:
குணேசநிவனஜா.

## 'நுண்ணுவர நூறு'

- திரவியம் -

நூலுட் சிறந்தது
நாலு மிரண்டும்.
நெல்லை விதைத்தால்
புல்லா வளரும்?
நேர்த்திக் கடனைப்
பூர்த்தி செய்திடு.
நொந்து போனாற்
சிந்தை வளரா.
நோன்பு காத்தே
வான்புகழ் சேர்ப்போம்.

பணமும் பொருளும்
கணமே மறையும்.
பாட்டும் கூத்தும்
வாட்டம் நீக்கும்.
பிறப்பு இருப்பின்
இறப்பு முண்டு.
பீடை வரினும்
சாடை பேசேல்.
புத்தகப் படிப்பே
வித்தகருக்கா.
பூசை செய்யினும்
ஆசை மறியா.
பெற்றோர் தம்மின்
நற்றுக் போற்று.
பேராசை தன்னைக்
காரசதொழிப் போம்.

(தொடரும்)

## அந்தோ பரிதாபம்!

சென்ற ஆண்டு பிரான்ஸில் 20 பேர் துப்பாக்கிக் குண்டுகளினால் இறந்தனர்; பிரிட்டனில் 30 பேர்; அமெரிக்காவில் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானோர் 19,000 ஆகும். அதாவது நாளொன்றுக்கு 50 பேர்; அல்லது ஒரு மணிக்கு 2 பேர் வீதம் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

சென்ற ஆண்டு துப்பாக்கியால் கடப்பட்டு இறந்தோரின் எண்ணிக்கையை, 1900-ம் ஆண்டிலிருந்து கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையோடு சேர்த்தால் அது 7,92,343 ஆகிறது. இந்த விபரங்கள் அண்மையில் அமெரிக்க செனட் கூட்டத்தில் கூறப்பட்டது.

அடுத்தவார
'ஸ்பெஷல்'
நில நடுக்கம்
பற்றி
'பரணி'
அலசி ஆராய்கிறார்.

நில நடுக்கம் எப்படித்தோன்றுகிறது? இதை முன்கூட்டியே அறிந்து கொள்ள லாமா? - இவை போன்ற பல கேள்வி [illegible]

★ தொடர் நவீனம்

# ராஜா வீட்டுப் பிள்ளை

பாமா ராஜகோபால்

[3]

கதறிக் கதறி அழுது கொண்டிருந்த ரவியை ரவியின் மாமா தேற்றிக்கொண்டிருந்தார்!

ரவியின் அப்பா சுந்தரேசன் பேயறைந்தவர்போல் அதிர்ச்சிக்குள்ளானவராக அசந்துபோய் நின்றார்.

கனவிலும் நடக்குமென எண்ணியிராத சம்பவம் நடந்துவிட்டது!

அந்தச் சிறிதளவு நேரத்துக்குள் —

விமானநிலையமே துக்க சாகரத்துள் மூழ்கிவிட்டது!

ஆம், ரவியின் அம்மாவின் உயிர்—

பிரிந்துவிட்டது!

கோடானகோடி எண்ணங்களை இதயத்துள் புதைத்துக் கொண்டு, பிறந்தகம் வந்து சேர்வதற்கு முன்னரே அந்தத்தாய்க்கு இப்படி ஒரு பரிதாப நிலை ஏற்படவேண்டுமா?

ஆறு வருடங்களாகத் தன் தாயைக் காணாமல் இருந்த ஏக்கத்தில் — தாயைக் காணப்போகிறமே என்ற தவிப்பில் —

மகிழ்ச்சியின் உச்சியில் கூத்தாடிய ரவியை அந்த ஒரு கணத்துக்குள் ஏமாற்றிவிட்டு ரவியின் அம்மா பிரிந்துபோயிருக்கவேண்டுமா?

ஆனந்தம் தாண்டவமாட வேண்டிய அந்த பெரிய பங்களா வெறிச்சோடிக்கிடந்தது!

நடக்கும் எனக் கற்பனை பண்ணமுடியாத அந்தச் சம்பவம் நடந்து நான்கு தினங்கள் ஓடி மறைந்துவிட்டன.

ஆனாலும் —

அங்கு ஒரு சிறிய பேச்சு ஒலிகூட எழவில்லை!

ரவியின் அப்பா சாய்மனைக்கதிரையில் எங்கோ வெறித்துப் பார்த்தபடி சோகனையில் ஆழ்ந்திருந்தார்.

அவர்முகத்தில் தாடிவளர்ந்து, அவர் வெறுப்புற்றவராகக் காணப்பட்டார்!

ரவியின் மாமி ரவியின் சின்னத்தமைச்சி 'ஜீனா' தூக்கிக்கொண்டு பால்கொடுப்பதில் ஈடுபட்டிருந்தார்!

ஆனால் ஜீனா —

தன் அம்மாவை மறக்க முடியாதவளாய், பால் குடிக்க மறுத்து, சிணுங்கிக் கொண்டிருந்தாள்!

அந்தப் பிஞ்சுஉள்ளம் —

பெற்றவளின் பிரிவுவேதனையை அணுஅணுவாக அனுபவித்துக்கொண்டிருந்தது.

தாயின் மடியில் மப்பத்துறங்கி அவளின் அன்புக் கரங்களின் அரவணைப்பில் இனிமை கண்ட 'ஜீனா'—

பாவம், சின்னஞ்சிறு குழந்தையிடமிருந்து ஏன்தான் ஆண்டவன் அதன் தாயைப் பிரித்தாரோ? எப்படித்தான் மனம்வந்ததோ?

ரவி தனது அறையில் கட்டிலில் படுத்துக்கொண்டு தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அவன் முகம் களையிழந்திருந்தது!

முட்டை அண்ணாந்து பார்த்துக்கொண்டு வாய்க்குள் "அம்மா, அம்மா" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தான்!

அவனையறியாமலே அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது!

ரவிக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை!

மேலே பார்த்துக்கொண்டிருந்த ரவி —

திடீரென்று "அம்மா, அம்மா என்று கத்தினான்.

அந்தக் கதறல் சத்தம் அந்தப் பெரிய பங்களாவில் எதிரொலித்தது. ரவியின் அப்பா, மாமா காதுகளில் விழுந்தது!

அவர்கள் ரவியின் அறைக்கு பதைபதைத்து ஓடி வந்து பார்க்கிறார்கள்!

அங்கே —

ரவி இருந்த கோலம் அவர்களை அதிர்ச்சியடைய வைத்துவிட்டது! (தொடரும்)

# நித்திரை செய்து கொண்டே நடை பயில்கிறார்கள்!

அவன் தூக்கத்தில் பேசுகிறான்; அவன் தூக்கத்தில் எழுந்து நடக்கிறான்; அவன் கண்களைத் திறந்தபடி இருந்துங்கூட அவன் எதையுமே பார்ப்பதில்லை' — இப்படி சில பெற்றோர்கள் தமது குழந்தைகளைப் பற்றிச் சொல்லிக் கவலைப்பட்டுக் கொள்வது தெரிந்ததே.

தூக்கத்தில் ஏற்படும் இந்தக்கோளாறு 'ஹிஸ்டீரியா', 'காக்கை வலிப்பு' போன்ற பல நோய்களுடன்சேர்ந்தே ஏற்படுவதாகத் தெரிகிறது.

இந்த நோயில் பலவகையுண்டு. சில நோயாளிகள் படுக்கையிலிருந்து எழாமலேயே ஏதேனும் செய்ய முயலுகின்றனர். வேறு சிலர் படுக்கையிலிருந்து எழுந்து, புத்திசாலித்தனமான வேலைகளிலும் ஈடுபடுகின்றனர். அந்த நோயாளிசமையல் செய்யக்கூடும்! அல்லது அறையைச் சுத்தம் செய்யக்கூடும்; விழித்தவுடன் தான் செய்த வேலைகள் ஏதொன்றும் அவருக்கு நினைவிருப்பதில்லை.

சிலர் தூக்கத்திலிருந்து கொண்டு, ஜன்னல் வழியாகக் குதித்து தெருவில் நடக்கின்றனர். கூரையின்விளிம்பில் நடப்பதுபோன்ற சாகசச் செயல்களையும் சிலர் செய்கின்றனர். மூளையின் உயர்வும் கேந்திரங்களின் கட்டுப்பாடின்றியே சில பகுதிகள் தன்னிச்சையாகச் செயல்படுவதாலேயே இப்படியான 'தூக்க'த்தில் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

தூக்கத்தில் நடக்கும் ஒருவனை, அவனது செயலின்போது எழுப்புதல் கூடாது. மாறாக அவனது கையைப்பிடித்து, அவனது அறைக்குக் கூட்டிச்செல்ல வேண்டும்.

குழந்தைப் பருவத்தில் ஏற்படும் இந்த நோய், அநேகமாகப் பிற்காலத்தில்தானாகவே எவ்வித சுவடுமின்றி மறைந்துவிடுகிறது.

படிப்பதற்கும், விளையாடுவதற்கும், உண்பதற்கும், உறங்குவதற்கும் சரியான காலதிட்டத்தை அமைத்து, அதை அவன்பின்பற்றுமாறு செய்யவேண்டும். தகுந்த உடற்பயிற்சியுடன், அவனது நரம்பு மண்டலத்திற்கு முறுக்கேற்ற சில 'டானிக்கு'களும் கொடுக்கவேண்டும். தூக்கத்தில் நடக்கும் வியாதியுடன், வேறு ஒருநோயும் சேர்ந்திருப்பதாகத் தெரிந்தால், அந்தநோயைக் கண்டறிந்து குணப்படுத்தவேண்டும்.

— பரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை கல்விப்பகுதி விளையாட்டுப் போட்டி முடிவுகள்

திருக்கோணமலை, புதன் கல்வித்திணைக்களத் தினால் திருகோணமலை மக்கெய்ஸர் சுற்றுமதில் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் 4X100 மீட்டர் ஓட்டம், 4X400 மீட்டர் ஓட்டம் ஆகிய இரண்டிலும் திருக்கோணமலை ஆர்ச். குசைப்பர் கல்லூரி வெற்றியீட்டியுள்ளது. இக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் திரு. கே. குணராசா தாம் பங்கு கொண்ட 5 போட்டிகளிலும் வெற்றியீட்டி, இதே கல்லூரியை அஞ்சல் ஓட்டத்திலும் வெற்றிபெறச் செய்தார். இவ் விளையாட்டுப்போட்டிகளை விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ். இரத்தினவேலு பிரதம கல்வி அதிகாரி திருமதி ஆர். ஆர். எம். பாமர் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விபரங்களிற் சில வருமாறு:

பெண்கள்: [100 மீட்டர்] ஆர். எம். இறிபாவதி [அ. மெ. க. பா], கே. ஏ. டி. [சோமலதா [சந்தளாய் ம. வி], கருணாவதி சுபசிங்கி [முள்ளிப்பொத்தானை சிங்கள வித்தியாலயம்].

பெண்கள்: 200 மீட்டர்- கே. ஏ. டி. சோமலதா, எஸ். சண்முகராணி [அல்லி அ. த. க. பா], ஆர். எம். இறிபாவதி.

ஆண்கள்: 100 மீட்டர்- கே. குணராசா [ஆர்ச். குசைப்பர் கல்லூரி], எஸ். எம். அபூபக்கர் நிலாவெளி (அ. மெ. க. பா], ஏ. ரீ. சந்திரதாஸா.

ஆண்கள்: 200 மீட்டர்- கே. குணராசா [ஆர்ச் குசைப்பர் கல்லூரி], ஏ. ரீ. சந்திரதாஸா, ஜீ. ஏ. ஆனந்த வர்த்தன [திஸ்ஸா வித்தியாலயா].

ஆண்கள்: 400 மீட்டர்- கே. குணராசா, பீ. தர்மசேன [சேருபுரா வித்தியாலயா] டீ. குணபால பெரிய கிண்ணியா அ. க. ஆண்கள் பாடசாலை.

ஆண்கள்: 800 மீட்டர்- கே. குணராசா, ஏ. டீ. சந்திரசேன [அக்ரபோதி ம. வி), டீ குணபால பெரிய கிண்ணியா அ. க. ஆ. பா].

ஆண்கள்: [1500 மீட்டர்] ஏ. டீ. சந்திரசேன., எம். ஹேமபால [கிண்ணியா ம. வி], நிஹால் பெரேரா [ஆர்ச். கு. க].

உயரமபாய்தல்: எம். ஐ. எம். அனவர் [மூதூர் ம. வி]. ஏ. ரீ சந்திரதாஸா [நிலாவெளி அ. மெ. க. பா], ஏ. எம். எம். முஸ்தாபா [சின்னக்கிண்ணியா அ. மெ. க. பா]. ஏ. ரீ. சந்திரதாஸா [அக்ரபோதி ம. வி]

நீளம்பாய்தல்: கே. குணராசா ஏ. ரீ. சந்திரதாஸா, எஸ். ,எம். அபூபக்கர்.

உயரம் பாய்தல்: எஸ் எம். அபூபக்கர், ஏ. எம். முஸ்தாபா, அஹமது சித்தீக் [கஞ்சிமடம் ம. வி]

4X100 மீட்டர் அஞ்சலோட்டம்: ஆர்ச் குசைப்பர் கல்லூரி, பெரியகிண்ணியா அ. மெ. க. பா], திருக்கோணமலை சிங்கள ஆரம்ப பாடசாலை.

4X100 மீட்டர் அஞ்சல் ஓட்டம்: ஆர்ச். குசைப்பர் கல்லூரி, சின்ன கிண்ணியா அ. மெ. க. பா, பெரிய கிண்ணியா அ. மெ. க. பா];

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

# திருமலையும்—யாழ். நகரும் 6-ம் திகதி மோதுகின்றன

யாழ்ப்பாணம், வியா.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினரால் நடாத்தப்பட்டுவரும் அகில இலங்கை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டாவது வட்டத்தில், யாழ்ப்பாணம் உதைபந்தாட்டத் தெரிவுக்கோஷ்டியும், திருக்கோணமலை உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியும், வருகிற 6-ம் திகதி யாழ்ப்பாணத்தில் போட்டியிடவிருக்கின்றன.

இம் முறை யாழ். உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியில் மிகவும் திறமை வாய்ந்த வீரர்கள் அங்கம் வகிக்கின்றனர். இக் கோஷ்டி கடந்த ஒரு வாரமாக, காலையும், மாலையும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டப் பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றது.

கடந்த ஒரு வருடத்தின் பின் யாழ்ப்பாணத்தில் நடைபெறும், இம் மாபெரும் உதைபந்தாட்டப்போட்டியைக் கண்டு களிக்கவரும் ரசிகர்கள் கூட்டத்தை சமாளிப்பதற்கான முன் ஏற்பாடுகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. இப்போட்டி யாழ்ப்பாணம் சென்.பற்றிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

திருக்கோணமலைத் தெரிவுக்கோஷ்டி, முதலாவது வட்டத்தில் மட்டக்களப்புத் தெரிவுக்கோஷ்டியை 6—1 கோல்களாக் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. [தே. நி]

# கைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

உடுப்பிட்டி, புதன் கரவெட்டி சுடரொளி விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அல்வாய் நடாபிறதேர்ஸுக்கும் இலையாணன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் அல்வாய்க் கோஷ்டி வெற்றியீட்டியது. மத்தியஸ்தராக திரு எஸ். சிதம்பரநாதன் கடமையாற்றினர்.

நடாபிறதேர்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் நடா கோஷ்டி வென்றது.

## உதைபந்தாட்ட சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 29-ம் திகதி யாழ் மத்திய கல்லூரியில் சம்மேளனத் தலைவர் திரு இ. சபாலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## ரூ. 60 லட்சம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சாமி, பி. ஆர். கிலியப்ஸ் ஆகியோர் கமிட்டி அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

### அபராதம்

மோட்டார் லோஞ்சில் குறிப்பிட்ட அளவுக்குமேல் ஆட்களை ஏற்றிச் சென்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்குகளில் ரீ. கே. சந்திரன் குற்றவாளி எனத்தாம் ஒப்புக்கொண்டதன்பேரில் அவருக்கு 50 ரூபா விதிக்கப்பட்டது. என். நவரெத்தினத்துக்கு 20 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஏ. எம். அபூபக்கர், எம். சுவாமிப்பிள்ளை, ஆகிய இருவரும் மேலும் விசாரிக்கப்படுகின்றனர்.

### திருடியதாக ஒப்புக்கொண்டார்

வீடு உடைத்து, களவு செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் ஆர். எம். ஹமீது என்பவர் தாம் குற்றவாளி என ஒப்புக்கொண்டுள்ளார். வழக்கு இம்மாதம் 15-ம் திகதிவரை ஒத்திப்போடப்பட்டிருக்கிறது.

### பாலகன் அலிகான் கொலை வழக்கு

இரண்டரை வயதுப் பாலகன் அலிகான் கொலை வழக்கு மீண்டும் இம்மாதம் 15-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

### நிருபர்கள் வெளியேற்றம் கண்டனம்

திருக்கோணமலை நகரசபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற போது திருக்கோணமலை பஸ் தரிப்பு நிலையம் பற்றிய பிரச்னை எழுந்தபோது பத்திரிகைநிருபர்கள் வெளியேற்றப்பட்டனர்.

### பெயர்ப்பலகையில் சிங்களமும் ஆங்கிலமும்

முன்னைநாள் திருக்கோணமலை ஆட்சிமன்ற உறுப்பினரும் தமிழ் அரசுக் கட்சிப் பிரமுகருமான காலஞ்சென்ற திரு. என். ஆர். இராஜவரோதயத்தின் [illegible] வீதி [illegible] எனப்பெயரிட்டு பெயர்ப்பலகையு மிடப்பட்டது. இப்பலகையில் இப்போது சிங்களமும் ஆங்கிலமுமே காணப்படுகின்றன. இப்பகுதி நகரசபை இது பற்றி இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.


## குதிரை மார்க் வாளிகள்



குதிரை மார்க் கல்வனைஸ்ட் வாளிகளை வாங்கி உபயோகிக்கிறீர்களா?
இன்றே வாங்குங்கள்

குதிரை மார்க் வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளினால் செய்யப்பட்டவை. எங்கள் தொழிற்சாலையில் மட்டும் கல்வனைஸ் முறைப்படி விசேஷமாகத் தயாரிக்கப்படுவன. உங்களுக்கு வேண்டிய எல்லாவித அளவுகளிலும்கிடைக்கும்




தயாரிப்பாளர்கள்:-
தலைமைக்காரியாலயம்:- எல்பிஹெம்ஹவுஸ் கொழும்பு.
தொழிற்சாலை:- எல்பிஹெம் ஹவுஸ் மாவிட்டபுரம்.
வடமாகாண விநியோகஸ்தர்கள்:-
தனலக்குமி ஸ்ரோர்ஸ் தெல்லிப்பழை.
ஏனைய பகுதிகளின் ஏகவிநியோகஸ்தர்:
லிங்கன் ட்ரேடர்ஸ் சென். ஜோன்ஸ் வீதி, கொழும்பு 11.

வல்வெட்டித்துறை சுப்பிரமணியன் சோடாக்கம்பெனியாரின்

## முக்கிய அறிவித்தல்

குளிர்பானங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களின் விலையேற்றத்தினாலும் வேறு தவிர்க்க முடியாத பல காரணங்களினாலும் எங்கள்

# பேபி மார்க்

ஸ்பெஷல் பானங்களின் விலைகளை

# 5-9-68

தொடக்கம் உயர்த்தி இருக்கின்றோமென்பதை எங்கள் வியாபாரிகளுக்கும், பாவனையாளர்களுக்கும் வருத்தத்துடன் தெரியப்படுத்துகின்றோம்.

| | பழைய விலைகள் டசின் ஒன்றுக்கு ரூபா சதம் | | புதிய விலைகள் டசின் ஒன்றுக்கு ரூபா சதம் |
|---|---|---|---|
| பேபி மார்க் அடையாள வெள்ளைப் போத்தல்கள் | 3 - 00 | — | 3 - 60 |
| பேபி அடையாள சிறிய வெள்ளைப் போத்தல்கள் | 1 - 80 | — | 2 - 40 |
| பேபி அடையாள வர்ணப் போத்தல்கள் | 2 - 40 | — | 3 - 00 |
| சோடா வாட்டர் — | 1 - 80 | — | 2 - 40 |

வல்வெட்டித்துறை, 5-9-68.

இங்ஙனம், உரிமையாளர், சுப்பிரமணியன் சோடாக் கம்பனி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செக். உதவிப்பிரதமர் பதவியிலிருந்து நீக்கம்

பிராக், செப். 4

செக்கோஸ்லவாக்கியாவின் உதவிப் பிரதமர் ஒருவரான டாக்டர் ஷிக், செக். ஜனாதிபதி ஸ்வொபோடாவினால், அவரது சொந்த விருப்பத்தின் பேரிலேயே பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

செக்கோஸ்லவாக்கியாவில் ரஷ்ய, வார்ஸோ—துருப்புகள், சர்வதேசப் பிரவேசித்த போது, யூகோஸ்லாவியாவில் தங்கியிருந்த மூன்று செக். மந்திரிகளில் இவரும் ஒருவராவார். இப்போதும் அவர் அங்குதான் இருக்கிறார்.

யூகோஸ்லாவியாவில் தற்போதுள்ள செக் வெளிவுறவு மந்திரியான திரு. ஹஜெக், ரஷ்யப்பத்திரிகையான 'இஸ்வெஸ்டியா' கடுமையாகத் தாக்கியுள்ளது. திரு. ஹஜெக்கைப் பிற்போக்குச் சக்திகளின் நண்பனென்றும், மேற்கு நாடுகளுக்கு மிக நெருக்கமாகச் செக்கோஸ்லாவாக்கியாவை அவர் கொண்டுசெல்ல முயன்றதாகவும் அப்பத்திரிகை குற்றஞ்சாட்டியுள்ளது.

செக்கோஸ்லாவாக்கியத் தலைநகரான பிராக்கில், பிராக் ரேடியோ நிலையம், லெட்டெக்கா பத்திரிகை ஸ்தாபனக் கட்டிடம் மற்றும் முக்கிய கட்டிடங்களிலிருந்து ஆக்கிரமிப்புத்துருப்புக்கள் வெளியேறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஆனால், செக். பாதுகாப்பு அமைச்சு உள்விவகார அமைச்சு ஆகியவை அடங்கியுள்ள கட்டிடத்தில், இன்னும் ஆக்கிரமிப்புத்துருப்புக்கள் காவல் புரிந்து வருகின்றனவாம்.

## இரவில் கைது

கொழும்பு, புதன்

14 யுவதிகள் ஒரே இரவில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் கொழும்பு முனிசிபல் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். 13-ம் திகதிவரை றிமாண்டில் இருக்க உத்தரவிடப்பட்ட இவர்கள் சந்தேகத்துக்கிடமாக நடமாடியதாகக் கருதப்படுகின்றது.

# "தனிநாடு திட்டம் உரிய நேரம் வெளிவரும்"

யாழ்ப்பாண, வியாழன்

"இரு வாரங்களுக்கு முன்னர் ஆட்சி மன்றத்தில் டாக்டர் சொல்வின் ஆர். டி. சில்வா விடுத்த மிரட்டலுக்கு டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பயந்துவிட்டார் போல் தெரிகின்றது. இல்லாவிட்டால் தமிழரசுக் கட்சி தமிழ் நாட்டுக் கொள்கையை முற்றாக நிராகரிக்கவில்லை என்றும், இன்றைய அரசியல் சூழ்நிலையில் இது உசிதமல்ல என்றும் அவர் சொல்வதற்கு வேறு அர்த்தம் கொள்ள முடியாது"

இவ்வாறு தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் தெரிவித்தார்.

தமிழ் நாட்டுக் கொள்கையை தமிழரசுக் கட்சி முற்றாக நிராகரிக்கவில்லையென்றும், தமிழ் நாடு கோரும் திரு. வி நவரத்தினம் ஏன் இன்னும் கொள்கைத் திட்டங்களை வெளியிடவில்லை என்றும் டாக்டர் நாகநாதன் சமீபத்தில் தெரிவித்திருந்ததற்கு பதிலளிக்கையில் திரு. நவரத்தினம் மேலும் தெரிவித்ததாவது.

தமிழ் நாட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்குச் சட்டம் போட்டு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா ஆட்சி மன்றத்தில் கூறியதற்கு நாம் பயந்துவிட முடியாது. தமிழ்நாட்டில் தான் எமக்கு சுபீட்சம் வருமென்றால் அதற்காக நாம் சகலதையும் இழந்து பாடுபட தயங்கக்கூடாது.

தமிழ்நாட்டுக் கொள்கையைப் பொறுத்த அளவில் அது தனி மனிதன் விஷயமல்ல வென்று. இதற்காக முன்னணியில் நிற்கும் ஆயிரமாயிரம் வாலிபர்களும் இதன் நிரல் தமது கொள்கைத்திட்டங்களை விரைவில் பிரகடனம் செய்வார்கள் என்றும் திரு. நவரத்தினம் மேலும் குறிப்பிட்டார்.

# தினமும் நின்றுகொண்டு 25,000 பேர் பிரயாணம்

அளவெட்டி, வியாழன்

யாழ்ப்பாணத்தில் பஸ்சேவை படுமோசமான நிலைமையை அடைந்து வருகிறது. இதனால் தினமும் நூற்றுக்கணக்கான பிரயாணிகள் கஷ்டப்படுகின்றனர்.

தென்யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. இ. எம். எஸ். நாதன் இன்றைய மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: தினமும் சுமார் 25000 பிரயாணிகள் யாழ்ப்பாணப் பஸ்ஸில் நின்றுகொண்டு பிரயாணம் செய்கின்றனர். ஆயிரக்கணக்கான பிரயாணிகள் பல மணிநேரம் "கியூவில்" காத்துநின்றும் பஸ்ஸில் இடம் கிடைக்காது ஏமாற்றத்துடன் வீடுதிரும்புகின்றனர். இவர்களில் அநேகர் தனிப்பட்ட வாகனங்களில் பிரயாணம் செய்கின்றனர்.

வடபகுதி பஸ்சேவையைச் சீராக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தற்கொலை

சுன்னாகம், புதன்

ஐந்து பிள்ளைகளின் தந்தையும் சண்டிலிப்பாய் டச்சு வீதியைச் சேர்ந்தவருமான இராமுப்பிள்ளை சின்னராசா (வயது 33) நச்சுத்திராவகம் அருந்தி அபாயகரமான நிலையில் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணத்திற்குள்ளானார்.

சிறந்த விவசாயியாகிய சின்னராசா தன்னிஷ்டப்படி விவாகம் செய்துகொண்டமையால் உறவினர்களால் வெறுக்கப்பட்டிருந்தார் எனவும் அண்மையில் நடைபெற்ற கொலை எதிர் வழக்கொன்றின் முக்கிய சாட்சியாக இருந்தார் எனவும் தெரிய வருகிறது. சாட்சியங்களைப் பதிவு செய்த யாழ் மரண விசாரணை அதிகாரி திரு. இராசநாயகம் நச்சுத்திராவகம் அருந்தியமையால் ஏற்பட்ட தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# நள்ளிரவில் தீபற்றியது ரூபா 15,000 கருவாடு சேதம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் குருநகரில் இன்று அதிகாலை ஐந்து கொட்டில்கள் தீப்பிடித்து தரைமட்டமாகின.

கருவாடு பதனிடப் போடப்பட்டிருந்த 5 ஓலைக் கொட்டில்கள் தீக்கிரையாகித் தரைமட்டமாகின. இதனால் சுமார் 15,000 ரூபா பெறுமதியான கருவாடு நாசமாகியது எனக் கூறப்படுகிறது. இச் சம்பவம் இன்று அதிகாலை 2 மணியளவில் குருநகரில் நடைபெற்றது.

குருநகரைச் சேர்ந்த மரியம்பிள்ளை, சின்னராசா, எலிஸபெத், ரட்ணம், புஷ்பம், சேவியர் ஆகிய ஐவருடைய கருவாட்டுக் கொட்டில்களுமே நள்ளிரவு தீக்கிரையானவையாகும். ஒருவரும் கொட்டிலுக்குள் இல்லாத சமயம் நடைபெற்ற இத் தீவிபத்து ஒரு நாசவேலையாக இருக்கலாமெனக் கருதப்படுகின்றது.

கொட்டில்கள் தீப்பிடித்து எரிந்து கொண்டிருப்பதைக் கண்டதும் தேவாலயங்களிலுள்ள மணிகள் நடுச்சாமத்தில் அடிக்கப்பட்டு, அபாயம் உணர்த்தப்பட்டது. அயல் வீடுகளிலிருந்த பொதுமக்கள் இதனால் அச்சம் கொண்டு தமது உடமைகளுடன் வீட்டுக்கு வெளியே ஓடிவிட்டார்கள்.

அபாய மணியைக் கேட்டு ஸ்தலத்துக்கு விரைந்து சென்ற சுமார் 200 வாலிபர்கள் இரு மணிநேர போராட்டத்தின் பின்னர் காலை 4 மணியளவில் தீ அடுத்த கொட்டில்களுக்கும் பரவாமல் அணைத்தனர்.

சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்ட போதும் 5 கொட்டில்கள் எரிந்து தரைமட்டமாகின.

## மந்திரி விஜயம்

நல்லூர், வியாழன்

சுகாதார அமைச்சர் இம்மாதம் 15-ம் திகதி யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கிறார்.

## புராதனக் கிணறு

வரணி புதன்

வரணியில் உள்ள வயல் வெளியில் புராதனக்கிணறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கிணறு 4 அடி விட்டமுள்ள செங்கற்களினால் கட்டப்பட்டுள்ளது. வரணி றிஜிஸ்றார் திரு. எஸ். கந்தையா இன்றுகாலை இக்கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட செங்கல் ஒன்றை யாழ்ப்பாணம் நூதனசாலைக்கு அன்பளித்துள்ளார்.

யூனியனிலிருந்து

## 25 காவலாளிகள் ராஜினாமா

நல்லூர், வியாழன்

தேசிய அரசாங்க சுகாதார சேவை தொழிலாளர் சங்கத்திலிருந்து 25 காவலாளிகள் ராஜினாமா செய்கிறார்கள். இவர்களில் 5 பேர் இன்று தமது ராஜினாமாக்களை மேலதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளனர். மற்ற 20 பேரும் பின்னர் தமது ராஜினாமாக்களை சமர்ப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சந்நிதியில் தீக்குளித்தார் 80 வயது வயோதிபர்

வல்வெட்டித்துறை, புதன்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவிலில் இன்று காலை பூசை முடிந்ததும் சுமார் 30 பக்தர்கள் தீக்குளித்தனர். சுமார் 80 வயதான வயோதிபர் ஒருவர் 'அரோஹரா' என்ற கோஷத்துடன் தள்ளாடியபடி தீக்குளித்தார்.

ஏ. எஸ். பி. தவராசாவின் தலைமையில், சப் இன்ஸ்பெக்டர் வியனகே, இன்ஸ்பெக்டர் குணரத்தினம் ஆகியோரைக் கொண்ட பொலிஸ் கோஷ்டியொன்று இன்று சந்நிதி கோவிலுக்கு வந்துசேர்ந்தது.

கோவில் வீதிகளில், சேட் செருப்பு அணிந்து செல்பவர்களையும் சிகரட் பிடிப்பவர்களையும், பொலிசார் இன்றுகாலை கைது செய்து விசாரணை செய்தனர். டெர்லின் சேட் அணிந்திருந்த ஒருவரை சிகரட் புகைத்துக்கொண்டிருந்த போது பொலிசார் விசாரணை செய்தனர்.

சுகாதார பரிசோதகர்கள் டி. தம்புசாமி, வி. மகேந்திரன். எஸ். குணநாதன் ஆகியோர் சுகாதார வேலைகளை கவனித்து வருகின்றனர். நேற்றிரவு கடைசி நல்லூர் மஜீத் இன்னிசைவிருந்தளித்தார். அச்சமயம் பக்கம் செம்பு கொண்டு சென்ற 3 வயதுக்குழந்தை திடீரென உருக்கொண்டு ஆடியது. பக்தர்கள் 'அரோஹரா' எனக் கோஷமிட்டனர்.

திரு. எஸ். சணபதிப்பிள்ளை தலைமையின் கீழ் சந்நிதி தேவி துரைசிங்கம். 'திருவாசகத்தேன்' என்னும் சொற்பொழிவு கதாப்பிரசங்கம் செய்தார். இன்றிரவு சப்பறத்திருவிழா நடைபெறும். நாளை காலை 9 மணிக்கு சுவாமி தேரில் வலம் வருவார்.

## இணுவில் கலைவிழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

இணுவில் இசை நடன கிராமியக் கலைக் கல்லூரியினர் நடத்தும் கலைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்.

இரவு 6-05 மங்கள இசை—இணுவை வித்வான்கள் என். ஆர். சின்னராசா, இணுவை க. இ சுந்தரமூர்த்தி கோஷ்டி, 7-05 பாராட்டுரை — இசை வாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர், 7-15 கல்லூரிக் கீதம் (அபிநயம்), 7-45 தலைமயுரை—யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு இ. முருகேசம்பிள்ளை, 8-00 இன்னிசைக் கச்சேரி—திரு. பொன் சுந்தரலிங்கம், பாட்டு—கே. சித்திவிநாயகம், வயலின்—திரு. ப. சின்னராசா, செல்வன் ச. பிரணவநாதன், மிருதங்கம். 9-30 நடனம், 10-15 'நீதிக்கொருசாதனை' நாடகம்.

## ஜே. ஆர்: அலுவலகத்தில் தீ

கொழும்பு, புதன்

ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் உத்தியோகபூர்வமான காரியாலயத்தில் தீ பற்றிக் கொண்டது.

காரியாலயத்திலுள்ள முக்கிய தஸ்தாவேஜிகளெல்லாம் தீ பிடித்துவிடுமோ வென்று அதிகாரிகள் பயந்து அல்லோலகல்லோலப்பட்டனர். ஆனால் சில நிமிடத்தில் தீ அணைக்கப்பட்டுவிட்டது. மின்சாரக் கம்பிகளில் ஏற்பட்ட கோளாறுதான் இந்த தீவிபத்துக்கு காரணம் என்று கூறப்பட்டது.

## செக். தூதுக்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

செக் ரஷ்யாவைக் கேட்டுக்கொள்ளுமென்று இன்று செக் வானொலி அறிவித்தது.

படைகள் விலகுகின்றன

செக் நாட்டை ஆக்கிரமித்துக்கொண்ட வார்ஸோ ராணுவ ஒப்பந்த நாடுகளான போலந்து, பல்கேரி, ஹங்கேரி படைகள் இப்போது படிப்படியாக விலகிக்கொள்ள ஆரம்பித்துள்ளன. கி. ஜெர்மன் படைகள் ஏற்கனவே முற்றாகத் தமது படைகளை நாட்டிலிருந்து வாபஸ் பெற்றுவிட்டது.

## எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

பயிரழிப்பு வேலை அரசாங்கத்தின் உபஉணவுற்பத்தித் திட்டத்துக்கு எதிராகசெய்யப்பட்டுவரும் ஒரு நாசவேலையாகும். இவ் வேலையில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டால் இனி றிமாண்டில் வைக்கப்படுவார்கள்.

இவ்வாறு அச்சுவேலியிப் பகுதியில் பயிரழிப்பு வேலையில் ஈடுபடுபவர்களுக்கு பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் எச்சரிக்கை செய்துள்ளார்.


## உடன் தேவை

'ஈழநாடு' பத்திரிகை விற்பனை செய்வதற்கு பையன்கள் தேவை. நேரில் உடனடியாக வரவும்.

விநியோக மனேஜர்
'ஈழநாடு' யாழ்ப்பாணம்.



## விற்பனைக்கு

புதிய டயர்கள் 520x13, 560x13, 590x13, 590x15, 640x15 750x16, 700x20, 11x23 400x19 ஆகிய சைஸ் [illegible] தொடர்புகொள்ளவும். M. பொன்னுச்சாமி, வல்வெட்டித்துறை. 78


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org